# உங்களுடைய விண்ணப்பப் பதிவு அட்டையுடன் (ARC) நீங்கள் பிரச்சனையைக் கொண்டிருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

ஏப்ரல் 2010

Problems with your ARC - Tamil

உங்களுடைய விண்ணப்பப் பதிவு அட்டை அல்லது 'ARC' முக்கியமானதாகும். அது நீங்கள் புகலிடத்திற்காக விண்ணப்பித்திருக்கிறீர்கள் என்பதைக் காட்டுகிறது மற்றும் உங்களுடைய தனிப்பட்ட விவரங்கள் மற்றும் புகைப்படத்தை உள்ளடக்கியுள்ளது.

அதை உங்களால் மட்டுமே பயன்படுத்த முடியும். உங்களது ARC உங்களுடைய அடையாளத்தை நிரூபிக்கிறது மற்றும் உள்துறை அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட அஞ்சலகம் ஒன்றில் ரொக்க உதவிக்காக நீங்கள் அணுகுவதற்கும் உங்களை அனுமதிக்கிறது.

இச்சிற்றேடு உங்களுடைய ARC வேலை செய்வது நின்று போனாலோ அல்லது தொலைந்து அல்லது திருடு போனாலோ நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அதற்கு நாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதையும் அடையாளம் காட்டுகிறது:

**அஞ்சலகத்தில் எனக்கான பண உதவியை நான் பெற முயற்சிக்கும் வேளையில் என்னுடைய ARC வேலை செய்யாமற் போனால் நான் என்ன செய்ய வேண்டும்?**

ஏதாவது காரணத்திற்காக உங்களுடைய ARC வேலை செய்யாமற் போனால், அஞ்சலக பணியாளரிடம் ஒரு ரசீது வாங்கிக் கொண்டு உங்களது அட்டையை பிரிதொரு நேரத்தில் மீண்டும் உபயோகிக்க முயற்சிக்கவும். உங்களுடைய அட்டையை இருமுறை முயற்சிப்பதற்கு அஞ்சலகத்தில் கேட்பது முக்கியம். *உங்களுடைய அட்டை இரண்டு முறை நிராகரிக்கப்படுமானால், அஞ்சலகம் இரண்டாவது ரசீது ஒன்றினைத் தருவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.*

உங்களிடம் இரண்டு ரசீதுகள் இருக்குமானால், நீங்கள் எங்களுடைய அலுவலகத்திற்கு அவற்றைக் கொண்டு வரலாம். இது உள்துறை அலுவலகத்திற்கு உங்களது பிரச்சனையை நாங்கள் தெரிவித்து உங்களுக்கு உதவிட இயலும். நீங்கள் இரண்டு ரசீதுகளையும் உங்களுடன் எடுத்து வருவது முக்கியம், ஏனெனில் உள்துறை அலுவலகத்திற்கு இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நீங்கள் பண உதவியைப் பெற முயற்சித்ததில் தோல்வியடைந்திருக்கிறீர்கள் என்பதற்கான நிரூபணம் தேவைப்படும். தயவுசெய்து ரசீதுகளை அவ்வாரத்தில் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக கொண்டுவரவும். நீங்கள் ஒரு வாரம் கடந்தபிறகே பிரச்சினையைத் தெரிவித்தீர்களானால், உள்துறை அலுலவகத்தினால் நீங்கள் தவறவிட்டுள்ள பணம் எதையும் திருப்பித் தர இயலாது.

**என்னுடைய ARC தொலைந்து அல்லது திருட்டு போனால் நான் என்ன செய்ய வேண்டும்?**

உங்களுடைய ARC -யை நீங்கள் தொலைத்துவிட்டாலோ அல்லது யாரோ திருடிவிட்டாலோ, எங்களுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பாக காவல்துறையிடம் தெரிவிக்க வேண்டும். நீங்கள் பின்வருவனவற்றுடன் காவல்துறை அறிக்கையைப் பெற வேண்டியிருக்கும்:

- காவல் நிலையத்தினால் அளிக்கப்படும் (உங்களுக்கு ஒன்று தரப்பட்டிருந்தால்) குற்ற மேற்கோள் எண்
- உங்களுடைய அறிக்கையைப் பதிவு செய்த காவல்துறை அதிகாரியின் பெயர் அல்லது எண் மற்றும்
- நீங்கள் தெரிவித்த காவல் நிலையத்தின் பெயர்

Scottish Refugee Council, 5 Cadogan Square, (170 Blythswood Court), Glasgow G2 7PH Tel: 0141 248 9799, Fax: 0141 243 2499,
www.scottishrefugeecouncil.org.uk
Scottish Refugee Council is a charity registered in Scotland.
Registered Charity: SC008639

0141 532 2000 என்ற எண்ணில் ஸ்ட்ரேத்க்ளைட் காவல்துறையுடன் தொடர்பு கொள்ளவும். அவர்கள் உங்களுடைய உள்ளூர் காவல்துறையின் தொடர்பு விவரங்களை அளிப்பர். உள்ளூர் காவல்துறை உங்களுக்கு ஒரு அறிக்கையைப் பதிவு செய்ய உதவுவர்.

நீங்கள் அறிக்கையை எமது அலுவலகத்திற்கு எடுத்து வரவும். நாங்கள் உள்துறை அலுவலகத்திற்கு உங்களுடைய இழப்பு அல்லது திருடு போனதை தெரிவிக்க உங்களுக்கு உதவுவோம். ஒரு புதிய ARC- யை வழங்குவதற்கு பல வாரங்கள் ஆகலாம் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். நீங்கள் புதிய அட்டைக்காக காத்திருக்கும்போது, நாங்கள் உள்துறை அலுலவகத்திடம் அவசரகால உதவி டோக்கன்களை உங்களுக்குத் தருமாறு கேட்டுக் கொள்ள இயலும். இவை உங்களுடைய வீட்டு முகவரிக்கு DX என்கிற கூரியர் நிறுவனம் ஒன்றினால் ஒப்படைக்கப்படும்.

**நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வேளையில் என்னுடைய ARC -யைப் பயன்படுத்தி எனது உதவியை அணுக முடியாவிட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?**

நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்து, உங்களுடைய ARC -யைப் பயன்படுத்தி உங்களுடைய பண உதவியைப் பெற உங்களால் அஞ்சலகத்திற்குச் செல்ல முடியாவிட்டால், உங்களுடைய சமூக ஊழியரை, உங்களுக்கு ஒருவர் இருந்தால், அல்லது செவிலியை எங்களிடம் தொடர்பு கொள்ளுமாறு சொல்லவும். நாங்கள் அது குறித்து உள்துறை அலுவலகத்திற்கு உடனடியாக அறிவிக்க முடியும். நீங்கள் இதை கூடுமான வரையில் சீக்கிரம் செய்வது முக்கியம், ஏனெனில் உள்துறை அலுவலகம் உங்களது சூழ்நிலையை அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் எமது **இலவச தொலைபேசி எண் 0800 085 6087** யை அழைத்து பணியிலுள்ள நேர்வுப்பணியாளரிடம் பேசவும். எங்களுடைய இலவசத் தொலைபேசியினை தரைவழி தொலைபேசியிலிருந்து தான் அணுக முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

நாங்கள் உள்துறை அலுவலகத்திடம் உங்களது சூழ்நிலை மாற்றங்களைக் கூறும்படியாக நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்காவிட்டால், உங்களுக்கான உதவி நிறுத்தப்படலாம்; பண உதவி முன்னெடுத்துச் செல்லப்பட்டு பின்னொரு தேதியில் உங்களால் அணுக முடியாமற் போகலாம்.

**நான் ஒரு தற்காலிக ஓட்டுனர் உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நான் என்னுடைய ARC -யை ஓட்டுனர் மற்றும் வண்டிக்கான உரிமம் வழங்கும் முகமைக்கு (DVLA)அடையாள நிரூபணமாக அனுப்ப இயலுமா?**

உங்களுடைய ARC -யை தற்காலிக ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கான உங்களுடைய விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக **DVLA-** க்கு அனுப்ப **வேண்டாம்**. நீங்கள் ஒவ்வொரு வாரமும் அஞ்சலகத்திலிருந்து பண உதவி பெறுவதற்கு உங்களுடைய ARC தேவையாகும். அது இன்றி உங்களால் எந்த பணமும் பெற்றுக் கொள்ள முடியாது.

மார்ச் 25, 2010 அன்றை தேதிப்படி, நீங்கள் யு.கே-வில் புகலிடத்திற்கு விண்ணப்பித்திருந்து, இன்னமும் தங்குவதற்கான விடுப்பு **பெறவில்லை** என்றால், உங்களால் இனி யு.கே-வுக்கான ஓட்டுனர் உரிமத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.

அரசாங்க சட்டங்களின் சமீபத்திய மாற்றங்களின் அர்த்தம் என்னவெனில், யு.கே-வில் **குறைந்தபட்ச காலமாக 185 நாட்கள்** இருப்பதற்காக ஏதாவது ஒருவகை விடுப்பு அளிக்கப்பட்டவர்கள் மட்டுமே யு.கே ஓட்டுநருக்கான உரிமத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

இம்மாற்றம் மார்ச் 25, 2010க்கு முன்பாக யு.கே. ஓட்டுனர் உரிமத்திற்கு விண்ணப்பித்தவர்களைப் பாதிக்காது.